ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளி, ஹூஸ்டன், டெக்ஸஸ்

# தமிழ்ப் பாடநூல்

## 5

# Tamil Textbook



GREATER HOUSTON TAMIL SCHOOL
மெய்ப்பொருள் காண்பது அறிவு
ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளி

Greater Houston Tamil School
Houston, Texas

# ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளி

## ஹூஸ்டன், டெக்ஸஸ்

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளியின்

பாடத்திட்டக் குழுவால் உருவாக்கப்பட்டது

பள்ளி வலைத்தளம்

www.houstontamilschools.org

© ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளி முதல் பதிப்பு: 2013

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

- பெ. மீனாட்சிசுந்தரனார்

# பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | நன்னெறிப்பாடல் | : | **மெய்சொல்லல் நல்லதப்பா** | 1 |
| 2 | மொழி வாழ்த்து | : | **வாழ்க தமிழ் மொழி** | 4 |
| 3 | கதை | : | **மூன்று பொம்மைகள்** | 7 |
| 4 | கட்டுரை | : | **பேரறிஞர் அண்ணா** | 10 |
| 5 | கணினித் தமிழ் | : | **தமிழ் எழுத்துகளின் யூனிகோட் அமைப்பு** | 14 |
| 6 | உரையாடல் | : | **அணையா விளக்கு** | 17 |
| 7 | பாடல் | : | **நல்வழித் திரைப்படப் பாடல்** | 24 |
| 8 | விடுகதை | : | **கண்டுபிடிப்போம் வா! ; புதிர் : கண்டுபிடி** | 28 |
| 9 | இலக்கணம் | : | **உடன்பாடு, எதிர்மறை வினை வாக்கியங்கள்** | 32 |
| 10 | கதை | : | **உதவி** | 34 |
| 11 | உரையாடல் | : | **சங்கிலிக்குள் சங்கிலி** | 38 |
| 12 | கடிதம் | : | **மின்னஞ்சல் கடிதம் எழுதுவது எப்படி?** | 41 |
| 13 | கட்டுரை | : | **ஆப்பிரஹாம் லிங்கன்** | 44 |
| 14 | கதை | : | **இறகும் இலையும் ஒன்று** | 49 |
| 15 | செய்திக்கட்டுரை | : | **சுதந்திர தேவி சிலை** | 52 |
| 16 | இலக்கணம் | : | **செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்கள்** | 54 |
| 17 | கட்டுரை வரைதல் | : | **கட்டுரை எழுதுதல் எப்படி?** | 57 |
| 18 | கதை | : | **பொறுப்பான பொன்னுமணி** | 58 |
| 19 | புதிர் | : | **குறுக்கெழுத்து** | 61 |
| 20 | திருக்குறள் | | **குறட்பாக்கள் பத்து** | 64 |

# பாடத்திட்டம்

மொத்தம் இருபது வகுப்புகள். ஒவ்வொரு வகுப்பும் 2 மணி நேரம். இடையில் ஒரு 10 நிமிடங்கள் மாணவர்களுக்கு இடைவேளை தரலாம்.

**முதல் பருவத்தில் நடத்த வேண்டியது:**

1. நன்னெறிப் பாடல் – மொழி வாழ்த்து
2. கதை : மூன்று பொம்மைகள்
3. கட்டுரை : பேரறிஞர் அண்ணா
4. கணினித் தமிழ் : தமிழ் எழுத்துக்களின் யூனிகோட் அமைப்பு
5. உரையாடல் : அணையா விளக்கு
6. பாடல் : நல்வழித் திரைப்படப் பாடல்
7. விடுகதை : கண்டுபிடிப்போம் வா! ; புதிர் : கண்டுபிடி

**இரண்டாம் பருவத்தில் நடத்த வேண்டியது:**

1. இலக்கணம் : உடன்பாடு, எதிர்மறை வினை வாக்கியங்கள்
2. கதை : உதவி
3. உரையாடல் : சங்கிலிக்குள் சங்கிலி
4. கடிதம் : மின்னஞ்சல் கடிதம் எழுதுவது எப்படி?
5. கட்டுரை : ஆப்பிரஹாம் லிங்கன்
6. கதை : இறகும் இலையும் ஒன்று
7. செய்திக்கட்டுரை : சுதந்திர தேவி சிலை

**மூன்றாவது பருவத்தில் நடத்த வேண்டியது:**

1. இலக்கணம் : செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்கள்
2. கட்டுரை வரைதல் : கட்டுரை எழுதுதல் எப்படி?
3. கதை : பொறுப்பான பொன்னுமணி
4. புதிர் : குறுக்கெழுத்து
5. திட்டப்பணி 1 (ஆசிரியர் வழங்கும் தலைப்புகளில்)
6. திட்டப்பணி 2 (ஆசிரியர் வழங்கும் தலைப்புகளில்)
7. திட்டப்பணி 3 (ஆசிரியர் வழங்கும் தலைப்புகளில்)

**ஆசியர்களுக்கான குறிப்பு:**

நிலை 5 வகுப்பு மாணவர்களுக்கு **பேசுதல் (உரையாடல்), எழுதுதல், வாசித்தல், சரியாக உச்சரித்தல், மனப்பாடம் செய்தல்** என்று வரிசைப்படி முக்கியத்துவம் கொடுத்து கற்றுத்தருமாறு ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த வரிசையின் அடிப்படையில் வகுப்பு நேரத்தைத் தோராயமாகக் கணக்கிட்டுச் செலவிடுதல் வேண்டும். இறுதிக்கட்ட வகுப்புகளில் மாணாக்கர்களிடம் சில தலைப்புகள் வழங்கி திட்டப்பணிகள் செய்ய தயார் செய்தல் நன்று.

# நவீன ஆத்திச்சூடி

| | |
|---|---|
| 1. **அ**ன்பாய் இரு | அனைவரிடமும்அன்பாகப் பழகு |
| 2. **ஆ**க்கமாய் செயல்படு | எதனையும் தீர்க்கமாகச் சிந்தித்து செயல்படு. |
| 3. **இ**யல்பாய் நட | எல்லோரிடமும் உள்ளது உள்ளபடி நடந்துகொள். |
| 4. **ஈ**கை செய் | பிறருக்கு உதவுவதை நிறுத்தாதே. |
| 5. **உ**ழைத்துவாழ் | எப்பொழுதும் உன் சொந்த உழைப்பில் வாழ். |
| 6. **ஊ**னம் பாராதே | பிறரது ஊனத்தை ஏளனமாக கருதாதே. |
| 7. **எ**ண்ணி செலவுசெய் | பணம், நேரம் எதுவாயினும் கணக்கிட்டு செலவு செய். |
| 8. **ஏ**ற்றத்தை அளவிடு | வாழ்வில் ஏற்றம் வந்தபோதிலும் அளந்து வாழ்வதை மறக்காதே. |
| 9. **ஐ**ம்புலனையும் அடக்கியாள் | எந்தச் சூழ்நிலையிலும் அனைத்தையும் அடக்கி கட்டுப்பாட்டுடன் வாழ். |
| 10. **ஒ**ருமுகமாய் பேசாதே | ஒரு சார்பாகப் பேசாமல் பொதுவாகப் பேசு. |
| 11. **ஓ**டிஉழை | இயலும்வரை ஓடிஓடி உழைக்கத் தவறாதே. |
| 12. **ஔ**வை சொல்வதை கேள் | ஔவையார்போல் அறிவுமிகுந்து வாழ். |
| 13. அ**ஃ**தே நம் பண்பு | மேற்சொன்ன அனைத்தையும் பின்பற்றுவதே சிறந்த பண்பு. |



GREATER HOUSTON TAMIL SCHOOL
மெய்ப்பொருள் காண்பது அறிவு
ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளி